# ரூ.4 கோடியில் நடைப்பயிற்சி பாதையுடன் சீரமைக்கப்படும் தாமரைக்குளம்

## மாநகராட்சி நடவடிக்கை



ரூ. 4 கோடியில் சீரமைக்கப்பட உள்ள அம்பத்தூரை அடுத்த தாமரைக்குளம்.

நமது நிருபர்

**சென்னை, மார்ச் 2:** சென்னை மாநகராட்சியின் அம்பத்தூர் மண்டலத்துக்கு உள்பட்ட தாமரைக் குளம் நடைப்பயிற்சிப் பாதை, இருக்கைகள், உடற்பயிற்சி உபகரணங்கள் ஆகிய வசதியுடன் ரூ. 4 கோடி மதிப்பில் புனரமைக்க மாநகராட்சி திட்டமிட்டு,அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகராட்சியின் அம்பத்தூர் மண்டலத்துக்கு உள்பட்ட 79 வார்டில் அமைந்துள்ளது தாமரைக்குளம். சுமார் 6 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்தக் குளம், அம்பத்தூர் ஒரகடம் பகுதியின் முக்கிய குடிநீர் ஆதாரமாக விளங்கி வந்தது. இந்நிலையில், ஆக்கிரமிப்பு மற்றும் கழிவுநீர் கலப்பு ஆகியவற்றால் தாமரைக் குளம் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில், இக்குளத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைத்து குளத்துக்கான வரத்துக் கால்வாய் தூர் வாரப்படுவதுடன், அதைச் சுற்றி நடைப்பயிற்சிப் பூங்கா அமைக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்திருந்தனர்.

**ரூ. 4 கோடியில் பூங்கா:** இந்நிலையில், தாமரைக்குளத்தைப் பாதுகாக்கும் வகையிலும், மக்களுக்கு உபயோகப்படும் வகையிலும் அதைச் சுற்றி நடைப்பயிற்சி பாதையுடன் கூடிய பூங்கா ரூ. 4 கோடியில் அமைக்க மாநகராட்சி திட்டமிட்டு, அதற்கான பூமி பூஜை திங்கள்கிழமை நடைபெற்றது.

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில், 'மாநகராட்சி நீர்நிலைகள் சீரமைப்பு நிதியில் ரூ. 4 கோடியில் இந்தக் குளத்தை புனரமைக்க முடிவு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. முதலில் குளம் தூர்வாரப்பட்டு பின்பு, அதைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட உள்ளது.

இதன் தொடர்ச்சியாக குளத்தைச் சுற்றி நடைப்பயிற்சிப் பாதை, மக்கள் அமரும் வகையில் இருக்கைகள், உடற்பயிற்சி உபகரணங்கள் அமைக்கப்பட உள்ளன. மேலும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் வேம்பு, பூவரசன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான நாட்டு மரக்கன்றுகள் குளத்தை சுற்றி நடப்பட உள்ளன. இப்பணியை அடுத்த 4 மாதங்களுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது' என்றனர்.

Activat